| நம்மையும் நாட்டு மக்களையும் காப்போம் | தொற்றிலிருந்து தமிழகத்தை மீட்போம் |
|---|---|

செ.வெ.எண்:08 நாள்: 05.06.2021

## *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனை, புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம்களை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.செல்லக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஒய்.பிரகாஷ் (ஓசூர்), திரு.டி.மதியழகன் (பர்கூர்) ஆகியோர் முன்னிலையில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் இன்று (05.06.2021) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நகராட்சி, அரசு தலைமை மருத்துவமனை, வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், போலுப்பள்ளி ஊராட்சியில், புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகள், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், புக்கசாகரம் ஊராட்சியில் என்.டி.ஆர் இன்டர்நேஷனல் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாம் மற்றும் தளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

### மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக 24.05.2021 மற்றும் 25.05.2021 ஆகிய நாட்களில் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் மேற்கொண்டு, பல்வேறு பகுதிகளில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, இன்று (05.06.2021) கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை மைய பகுதிகளை பார்வையிடப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பல்வேறு தனியார் நிறுவனங்கள், சமுதாய அமைப்புகள், தனி நபர்கள் என அவர்களால் இயன்ற நிதியுதவி மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

அதன்படி, கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில், கேட்டர்பில்லர் நிறுவனம் சார்பாக 50 பிராணவாயு (Oxygen) சிலிண்டர்களும், டிவிஎஸ் நிறுவனம் சார்பாக 25 பிராணவாயு கொள்கலன்கள் மற்றும் டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் சார்பாக 10 பிராணவாயு கொள்கலன்கள் என மொத்தம் 35 பிராணவாயு கொள்கலன்கள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ உபகரணங்களை வழங்கி உள்ளார்கள்.

மேலும், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், போலுப்பள்ளி ஊராட்சியில் புதியதாக கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் கொரோனா நோய் தொற்றுலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். அதன்படி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம், புக்காசாகரம் பகுதி, என்.டி.ஆர் இன்டர்நேஷனல் பள்ளியில் நடைபெற்ற சிறப்பு கொரோனா தடுப்பூசி முகாமில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களின் நலன்கருதி கொரோனா நோய் தொற்று பாதித்த நபர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கும் விதமாக பல்வேறு பகுதிகளில் பிராணவாயு வசதி மற்றும் பிராணவாயு அற்ற படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, தளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 பிராணவாயு (Oxygen) படுக்கை வசதிகள் அமைக்கும் பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், நாளதுவரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 கொரோனா தொற்று பரிசோதனை ஆய்வகங்கள் மூலம், பரிசோதனை செய்யப்பட்ட 3,75,874 நபர்களில் 3,41,433 நபர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. நாளதுவரை 34,442 நபர்கள் கொரோனா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு, 30,708 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 1,239 நபர்கள் மற்றும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட 2,278 நபர்கள் என மொத்தம் 3,514 நபர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்கள். நாளதுவரை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 2,29,093 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தற்போது 2,502 படுக்கை வசதிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பொது மக்கள் வீட்டிலிருந்து வெளியில் வருவதையும், கூட்டங்களையும் தவிர்க்க வேண்டும். கொரோனா மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியினை கடைபிடிப்பது, கைகளை அடிக்கடி சோப்பு/ கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது ஆகியவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும். மேலும், நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், பொதுமக்கள் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனை/சிகிச்சை பெற வேண்டும். மக்கள் அனைவரும் அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் போர்கால நடவடிக்கையின்படி, விரைவில் கொரோனா நோய் தொற்று இல்லாத மாவட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் மாறும் என மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளில், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.என்.மணிமேகலை நாகராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.பீ.அசோகன், கோட்டாட்சியர் திரு.பி.குணசேகரன் (ஒசூர்), இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.பரமசிவன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.வெ.கோவிந்தன், உதவி செயற்பொறியாளர் திரு.பி.மகாவிஷ்னு, உதவிப்பொறியாளர்கள் திரு.சி.பன்னீர்செல்வம், திரு.எஸ்.இரத்தினவேல் மற்றும் திருமதி.வி.சி.கீதா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கிருஷ்ணகிரி.**

| | |
|---|---|
| **முககவசம் அணிவீர்** | **தனி மனித இடைவெளி கடைப்பிடிப்போம்** |